காலம் வென்று வாழும் கலைஞர் தெய்வம்! கழகம் கோயில்!!

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும். (திருக்குறள் 50)

தந்தைபெரி யார்காலம் தொட்டு, இன்றும்
தமிழ்தமிழர் அடிமையாகா உரிமை வேட்கை
செந்தமிழ்நம் தாய்மொழிக்கும் தாய்மண் ணிற்கும்
தகுதகைமை வழிகாணும் செயலின் ஆக்கம்
முந்திஎழும் வகைவாகை தேடிச் சூடி
முத்தமிழும் வளர்கின்றது என்றால் அந்த
விந்தைதி முகழகத்தைக் காலம் காத்த
வினைதிட்பக் கோக்கலைஞர் வினையால் அன்றோ!

தாய்மண்ணைத் தமிழ்மொழியை மேம்படுத்தித்
தமிழ்நாடு பெயர்சூட்டி மறைந்தார் அண்ணா!
ஆய்ந்தபெரும் மொழிக்களப்போர் மீண்டு வெற்றி
அறிஞரண்ணா கைதந்த தமிழர் நாட்டை
தோய்ந்துதோய்ந்து அடிநாட்கள் தொட்டு, தன்னின்
துடிப்புணர்ச்சி வேகத்தால் ஈகத் தாலே
வாய்த்தபெரும் தலைமையினால் என்றென் றைக்கும்
வாழும் தி மு.கழகமாகக் கலைஞர் கண்டார்!

சோதனைகள் ஒன்றிரண்டா எத்த னையோ
துன்பக்கடல் நீந்திநீந்திப் பயிற்சி பெற்று
வேதனைகள் சுடந்துகரை யேறும் ஈடில்
வெற்றிகுவி அற்புதத்தால் கலைஞர் கோமான்
போதனைகள் நீதிக்கட்சி பெரியார் அண்ணா
புடம்போட்ட கருத்துவழிப் போராட் டத்தால்
சாதனைகள் ஆட்சிகண்டார் மீண்டும் சூழ்ச்சி
தமைபன்னி ரெண்டாண்டுகடந் தேவென்றாரே!

இடைப்பட்ட ஆட்சிவாராக் காலம் தன்னில்
இரண்டகத்தார் தந்தகொடுங் கோலின் வஞ்சத்
தடைகளினை அமைதிவழி தகர்த்தெ றிந்தார்
சாகாத வரம்பெற்றார் சரித்தி ரத்தில்
நடைகள்தடு மாறுநடுவ ணரசிற் கும்தான்
நன்றுசெங்கோல் சமநீதி தந்து காத்தார்
கொடைகோடி கோடிகொடுத் தாலும் நம்மின்
கொள்கைக்கோ கலைஞர்க்கே ஈடா காதே!

வானத்தின் விண்மீன்கள் தனைத்தி ரட்டி
மாலைபுனைந் தேகலைஞர் கழுத்தில் சூட்டி
தானத்தின் கதிர்மதியின் ஒளிவெள் ளங்கள்
தனைஒன்றாய்க் குவித்துமணி மகுடம் மாக்கி
மானத்தின் தலைமகன்நம் கலைஞ ருக்கே
மரியாதை நன்றிதனைக் கூறி னாலும்
ஆனதி மு.கழகத்தை மீட்டுத் தந்தே
அறம்காத்த மோனத்திற்(கு) ஈடா காதே!

பொறுமைக்கே இலக்கணம்யார்? கலைஞ ரேதான்
பொறாமைபுதைத் தெழுகலைஞர் புனிதர் அன்றோ?
சிறுமைகண்டு பொங்கிஅழி அரிமா அண்ணல்
சித்தர்களுக் கெலாம்கலைஞர் சித்தர் கோவே!
வறுமைப்பிணி தமிழ்நாட்டில் வாரா வண்ணம்
மாண்பாட்சி வித்தகர்கோ கலைஞ ரேதான்
உறுதியிலும் உறுதிநெஞ்சத் துணிவால் மீட்சி(நம்)
உரிமைகளுக்(கு) அடித்தளமாய் அமைக லைஞர்!

இன்னும் ஓர் நூற்றாண்டும் இருப்பார் என்றே
எண்ணியேநம் தமிழரெல்லாம் மகிழும் போதில்
தன்னேரில் மகன் இஸ்டாலின் தனக்கா சானாய்த்
தமிழ்நாட்டின் மாத்தலைமைத் தகுதி தந்து
மன்னாத பெருமைமொரினாக் கடற்க ரையில்
மகன் தந்தைக்(கு) ஆற்றுதவி யாக வாரி
நன்றலைகள் காலமெலாம் வாழ்த்தும் தந்தை
நாடெல்லாம் வணங்க இஸ்டாலின் அருமை செய்தார்

ஓயாத தேனூற்றின் வருகை யைப்போல்
உயிர்காக்கும் மருந்துமர வளர்ச்சி யைப்போல்
சேயாகத் தமிழர்தம் தலைமு றைகள்
செந்தமிழர் பரம்பரைகள் போற்று மாறு
வாயார மனமார தமிழ்மக் கள்தாம்
வாழ்த்தமகன் உன்னதத்தின் ஆட்சிப் போற்றத்
தாயாகத் தந்ததமிழ்க்கோ கலைஞர் தெய்வம்!
தமிழரெல்லாம் தலைவணங்கும் கழகம் கோயில்!

கலைஞரைப்போல் ஒருதலைவர் உலக ரங்கில்
காணுவதோ அரிதாமவர் தமிழர் ஈதால்
நிலைஉலகம் உண்மைஅறி யாதல் கூடும்
நெடிதுபுகழ்க் கிலக்கான சமத்து வத்தின்
உலைகொதிக்கும் ஆக்கமுறைஎல் லோர்க்கும் எல்லாம்
உரிமைகிடைக் கின்றவகை செய்நம் முதல்வர்!
தலைமைக்கும் தலைமை யாம்நம் தலைவ ராலே
தமிழ்க்கோவாம் கலைஞர்புகழ் உலகே போற்றும்!

பெருங்கவிக்கோ **வா.மு.சேதுராமன்**
(உலக அமைப்பாளர், பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்)

திருக்குவளையில் கலைஞர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து - மரியாதை!

நாகை , ஜூன் 4 - நாகை மாவட்டம் திருக்குவளையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு கலைஞர் பிறந்த இல்லத்தில் கலைஞர் திருஉருவச் சிலைக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதான் தலைமையில் கழகத் தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப் பட்டது.

நாகை மாவட்டம் திருக்குவளையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் இல்லத்தில் கலைஞரின்தந்தை பெயரில் முத்துவேலர் நூலகமாகவும், தாயார் பெயரில் அஞ்சுகம் படிப்பகமாக உள்ளது. இந்த இல்லத்தில் கலைஞருக்கு மார்பளவு வெண்கல சிலை உள்ளது. மேலும் கலைஞர் தந்தை முத்துவேலர், தாயார் அஞ்சுகம், முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலிமாறன் ஆகியோரின் சிலை உள்ளது. இல்லத்தில் கலைஞர் முதல்வராக இருந்த போது தேசிய தலைவர்கள் சந்திப்பு, வெளிநாடு சுற்றுப் பயணம், தலைவர்கள் சந்திப்பு, கலைஞர் ஆட்சியின் சாதனை கொண்ட புகைப் படங்கள் உள்ளன. கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அஞ்சுகம், முத்துவேலர் அறக்கட்டளை ஏற்பாட்டில் கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் தலைமையில் கழகத்தினாள். மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் உமதிவாணன், தலைமைச் செயற்குழு உறுபினர்கள் இல மேகநாதன், ப.கோவிந்தரரசசன், . க.ராஜேந்திரன், க.மறைமலை,

மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் சோ. ரவிச்சந்திரன், ஆரூர் மணிவண்ணன், கற்பகம்நீலமேகம், பொதுக் குழு உறுப்பினர்கள் இலப ழனியப்பன், கோசிகுமார், எல்.எஸ்.ஈ. பழனியப்யன்,ஒன்றிய கழக செயலாளர்கள் ஆ..தாமஸ் ஆல்வா எடிசன், சோ.பா. மலர் வண்ணன், கே. பழனியப்பன், மகா.குமார்,விக்கல் என்ஆனந்த, உதயம் வே. முருகையன், பேரூர் செயலாளர்கள் காஅட்சயலிங்கம், மரியசார்லஸ், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் அ.பாரிபாலன், தமயந்தி, கே .சத்தியமூர்த்தி துணை அமைப்பாளர்கள் , வீரராகவன், செந்தில், தியாகராஜன், ஜோதிபாசு. லோகநாதன், சம்பத்,, சண்முகநாதன், , கலைஞர் இல்ல காப்பாளர் தியாகராஜன். ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக கலைஞரின் தந்தை முத்துவேலர், தாயார் அஞ்சுகம், முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலிமாறன் ஆகியோர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

அண்ணாநகர்

ஜெ.பாபு மறைவு!

சென்னை, ஜூன் 4 –

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணா நகர் வடக்குப் பகுதி, 101 வது வட்டச் செயற்குழு உறுப்பினர், 80 வது பாக முகவர்கள் ஜெ.பாபு நேற்று முன்தினம் (2.6.2025 திங்கட்கிழமை) இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறோம்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்ததும் சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, தயாநிதி மாறன் எம்.பி., எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., வடக்கு பகுதிச் செயலாளர் ச.பரமசிவம், மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 101 வது வட்டச் செயலாளர் க.கோவிந்தராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று (3.6.2025 செவ்வாய்க்கிழமை) 152/1, ஆர்.வி.நகர், அண்ணா நகர் கிழக்கு, சென்னை 102, அன்னாரின் இல்லத்தில் இருந்து புறப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.

கலைஞர் ஒரு சகாப்தம்!

ஜூன் 3ஆம் நாள் செம்மொழி நாள்! முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102ஆவது பிறந்த நாள்.

கலைஞர் கொண்ட கொள்கையில் உறுதியானவர். பெரியார் அண்ணாவின் பாதையில் இலட்சியப் பயணம் நடத்திக் கொண்டிருந்தார். அவர் தம் பகுத்தறிவுப் பாதை நேரானது. அவரைப் போலப் பயணம் தொடர்ந்தவர்கள் சிலர், செல்வம் சேர்க்க பின்தங்கி விட்டனர். இன்னும் சிலரோ பதவிகளுக்காகக் கிளைப் பாதைகளில் தவறி விட்டனர். மேலும், சிலரோ நிழல் தேடி ஒதுங்கி விட்டனர். அதிலும் சிலரோ, அதிகார அச்சத்தால் தொலைந்தும் போய் விட்டனர். ஆனால், கலைஞர் ஒருவரே, சூரியத் திசையில் சுழலும் பூமியாக அரசியல் வலம் வந்து கொண்டு இருந்தார்.

கலைஞரைப் பற்றித் தந்தை பெரியார் தீட்டிய வைரவரி வாசகங்கள் நம் நெஞ்சை பூரிப்படையை செய்கின்றன. “அண்ணா அவர்களுக்குப் பிறகு தமிழ்நாட்டை திறம்பட ஆண்டு வரும் கருணாநிதி, உழைப்பால் உயர்ந்தவர். பிற்படுத்தப்பட்ட வகுப்பில் தோன்றிச் சமுதாய மேம்பாட்டுக்காகப் பாடுபட்டுப் பலப்பல தியாகங்களைச் செய்து முன்னேறியவர்! இன்று தமிழகத்தை முன்னேற்றி வருபவர்; அண்ணாவின் மறைவிற்குப் பிறகு, நமக்கு கிடைத்த மாபெரும் சொத்தாகவே கலைஞரைக் கருதுகிறேன். அண்ணா மறைவின் போது அவரைப் பற்றி அவர் பாடிய கவிதை கேட்டபோதுதான், அவர் எவ்வளவு பெரிய புலவராக வளர்ந்து இருக்கிறார் என்று என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. உடனே டெலிபோனில் கூப்பிட்டு, ஐயா! நீங்கள் இவ்வளவு பெரிய புலவர் என்பதை இப்பொழுதுதான் தெரிந்து கொண்டேன் என்று பாராட்டினேன். இவ்வளவு நெருங்கிப் பழகிய என்னாலையே அவருடைய திறமைகளை உணர்ந்து கொள்ள முடியவில்லை. அப்படி எந்தத் துறையிலும் பிரகாசமாக விளங்குகிறார் . கலைஞர் கருணாநிதி அவர்கள் எந்தெந்த வகையில் எதிர்ப்புகள் வந்தாலும், அவைகளைச் சமாளித்து, தி.மு.க கழகத்தின் தொண்டராகப் பணியாற்றும் கழகத் தலைவர் இவரைப் போல கட்சிக்குப் பணியாற்றும் ஆள் கிடைப்பது அபூர்வம்” என்று அவர் தந்த சான்றாகும்.

1959 இல் கழகம் முதன் முதலாகச் சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்தது. அத்தேர்தலில் கழக வேட்பாளர்களை நிறுத்த தயங்கினார். ஆனால், கலைஞரோ அண்ணாவிடம் நாம் தேர்தலில் உறுதியாக நிற்க வேண்டும் என்று வலியுறுத்தியதோடுமொத்த 90 இடங்களுக்கான கழக வேட்பாளர்களை நிறுத்துவது என்றும், அவர்களின் பெயர்ப். பட்டியலையும் கொடுத்து விட்டார். தேர்தலில் கடுமையாகக் கலைஞர் உழைத்த காரணத்தினால் 45 கழக வேட்பாளர்கள் வெற்றி பெற்றார்கள். செய்தியைக் கேட்டதும் அண்ணா அவர்கள் கலைஞரைப் பார்த்து 45 பேர் வெற்றி பெற்று விட்டார்கள். ஆனால், நான் உன்னிடம் தோற்றுவிட்டேன் என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

வெற்றி பெற்றதற்காகச் சென்னை மெரினா கடற்கரையில் கலைஞருக்குப் பாராட்டு விழா அண்ணா தலைமையில் நடந்தது. “....கருணாநிதி இந்தக் குழுவிற்குத் தலைவராக இருந்து பல இடங்கள் வெற்றி பெறும் என்று சொன்னார் .நான் முடியாது என்று அவசரப்பட்டு சொன்னேன் .அப்படி வெற்றி பெற்றால் என்ன தருவீர்கள்? என்று கருணாநிதி கேட்டார். நான் தரவேண்டியது இருக்காது என்று எண்ணத்தில், ஒரு பவுன் தங்க மோதிரம் போடுகிறேன் என்று சொன்னேன் . நான் என் மனைவிக்குக் கூட ஒரு நகை வாங்குவதற்காக எந்தக் கடைக்கும் போனதில்லை. இந்த 45 பொல்லாத தோழர்கள் வெற்றியினால், இந்தக் கட்டிளங்காளைக்கு, நானே கடைக்குச் சென்று கணையாழி வாங்கி அளிக்க வேண்டியவனாகி விட்டேன் .இந்தத் தேர்தலில் மிகச் சுறுசுறுப்பாகப் பணியாற்றிய கருணாநிதி என் பாராட்டுக்குரிய, என்னுடைய பெரும திப்பிற்குரிய இலக்காக இருப்பவர். நீங்கள் எல்லாம் மகிழத்தக்க வகையில், இந்தக் கணையாழியை அவர் விரலில் அணிவிக்கிறேன்” என்று அண்ணா அணிவித்த கணையாழி கலைஞரின் இறுதி மூச்சு வரை அவரது விரலிலே தான் உயிராக இருந்து வந்தது!

கவிஞர் தமிழ்தாசன்
- கழகத் தீர்மானக் குழுத் தலைவர்

1953 ஆம் ஆண்டு ஜூலை 15 மும்முனை போராட்டம் தொடங்கியது. சித்தூர் எல்லைப் போராட்டம் குறித்து முட்டாள்தனம், நான்சென்ஸ் என்று பிரதமர் பண்டிதர் நேரு கிண்டல் செய்து பேசியதைக் .கண்டித்தும், இராஜாஜி அவர்கள் குலக்கல்வித் திட்டத்தை கொண்டு வந்தததை எதிர்த்தும், டால்மியாபுரம் என்ற வடநாட்டுக்காரனின் பெயரைக் கல்லக்குடி என்று தமிழ்ப் பெயராக மாற்றக் கூறியுமான போர். அண்ணாவால் அறிவிக்கப்பட்டது. இப்படியான போராட்டங்களினால் கழகத்தின் மதிப்பு உயர்ந்தது! மூன்றாம் முனைப் போராட்டமான டால்மியாபுரம் என்ற பெயரைக் கல்லக்குடி என்று மாற்றக் கூறும் போராட்டம் . கலைஞர் தலைமையில் முல்லை சக்தி, கஸ்தூரி, குமாரவேல், எஸ் குழந்தைவேல் ஆகிய ஐவரும் தண்டவாளத்தின் மீது தலை வைத்துப் படுத்து இரயிலைப் போக விடாமல் தடுத்தனர். அதனால் கைது செய்யப்பட்டார் கலைஞர். அவருடன் முல்லை சக்தி, கஸ்தூரி, குமாரவேல் குழந்தைவேல் ஆகிய ஐந்து பேர் உட்பட 35 பேருக்கு அரியலூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 6 மாதம் கடுங்காவல் தண்டனை விதித்து, திருச்சி மத்திய சிறையில் அவர்கள் அடைக்கப்பட்டார்கள்.

இதனை நினைவு கூரும் வகையில், கலைஞரின் பிறந்த நாளில் அண்ணா அவர்கள், கலைஞர் பற்றிப் பேசும்போது, ‘தண்டவாளத்தில் தலை வை என்று சொன்னாலும், மந்திரி பொறுப்பை ஏற்றுக் கொள் என்று சொன்னாலும், இரண்டையும் ஒன்றாகக் கருதுபவன் என் தம்பி கருணாநிதி” என்று பாராட்டுகளுடன் பெருமைப்படுத்திப் பேசி உள்ளார்.

இந்தி எதிர்ப்புப்போரில் சோழமண்டல மாநாடு, பாண்டி மண்டல மாநாடு சிறப்பாக நடத்தப்பட்டன தேனியில் இராஜேந்திரன் தலைமையில் விழா நடந்தது. அப்போது வீர வாள், கேடயம் கலைஞருக்குப் பரிசு அளிக்கப்பட்டதை ஏற்றுக் கொண்டார் கலைஞர்”..

அவ்விழாவில் அண்ணா நீண்டதோர் உரையாற்றிக் கலைஞரைப் பாராட்டினார் .....” என்னைப் பொறுத்தவரையில் கருணாநிதியின் தொண்டிலேயே மறக்க முடியாத நிகழ்ச்சி எதுவென்றால், திருவண்ணாமலை வெற்றிக்கு உழைத்ததும் அல்ல; சென்னை மாநகராட்சி வெற்றி பெற ஆற்றிய தொண்டுமல்ல; அவர் சிறு வாலிபராக இருந்த போது பிரச்சாரத்தால் முறுக்கேறிய காங்கிரசார் அவரை அடித்து, “ஆள் தொலைந்து விட்டான்” எனக் கருதும் அளவிற்கு உதைத்த காங்கிரசார், சிறுவனை ஒழித்து விட்டோம் என இரத்தம் பீறிடும் அளவுக்குப் புதுவையிலே காட்டுமிரான்டித்தனமாகத் தாக்கிய சம்பவம் தான்!

....”ஒரே குடும்பத்தில் உள்ள நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் சிறப்பானவர்கள்; நல்ல தமிழ் பேச நாவலர், உருக்கமாகப் பேச கருணாநிதி, சண்டமாருதம் போல் பேச சண்முகம், மாணவர்களுடையே பேச மதியழகன் இருக்கிறார்கள். அதையே தான் கருணாநிதி தான் வீரவாளைப் பெற்ற போது, “நான் ஒருவன் மட்டுமே இந்தத் தகுதி பெற்றவன் அல்ல; பலர் இருக்கிறார்கள்” என்றார். கலைத்துறையிலே கருணாநிதி பெற்ற புகழ் கொஞ்ச நஞ்சமல்ல; “பராசக்தி” மூலம் அவர் அடைந்த புகழோடு, மேலும், மேலும் பலத் திரைப் படங்களாலும் அவர் புகழ் அடைந்தார். கருணாநிதி அந்தப் புகழை நம்பி அந்தத் துறையிலேயே சென்று இருந்தால், பணத்தோடும் வாழலாம்; பகட்டோடும் வாழலாம்! ஆனால், அவர் கொண்ட இலச்சியத்தை மறந்து விடவில்லை!

“சர்க்கஸ்காரன் உயரத்தில் விளையாடினாலும், பூமியில்தான் இறங்க வேண்டும். விளையாடும் பொழுது கூட அவன் பூமியைப் பார்த்துக் கொண்டுதான் இருப்பான்; பூமியைப் பார்க்காமல் மேலே பார்த்துச் செல்பவன் பபூன் தான்! அவன்தான் தடுமாறி விழுவான்! அந்த இரகத்தைப் போன்று அல்லாது, கழகத்தை மறவாது, எந்தப் புகழுக்கும் மயங்காது பணியாற்றுபவர் தான் கருணாநிதி!” என்று உச்சி மோந்துப் பாராட்டினார் அண்ணா.

தமிழக எல்லையைத் தாண்டிக் கேரளா பகுதியில் உள்ளது வண்டிப் பெரியார் எனும் ஊர். அவ்வூர் கழகத் தோழர்கள் அழைப்பின் பேரில், ஏற்பாடு செய்யப்பட்ட நிதியளிப்புப் பொதுக் கூட்டம் ஒன்றிற்குச் சென்றிருந்தார். அவர் மேடையில் அமர்ந்திருந்த போது, வட்டார தோழர் ஒருவர் பேசிய தவறான வார்த்தையின் காரணமாக எதிரிகளால் மேடை மற்றும் நாற்காலிகள், குழல்விளக்குகள் தாக்கப்பட்டன. இதனால் கலைஞரைப் பாதுகாப்பாகக் காட்டு வழியே கொண்டு சென்று கம்பம் நகரில் சேர்த்தனர். அவருடன் வந்திருந்த கழக முன்னோடிகள் வெவ்வேறு வழியில் சென்று விட்டனர்.

இந்தச் செய்தி. ... “கருணாநிதி உயிர்தப்பினார்” ...என்று மாலை ஏடுகளில் வந்தது. காஞ்சிபுரத்திலிருந்து சென்னைக்குக் காரில் வந்து கொண்டிருந்த அண்ணா அவர்கள், இச் செய்தியைப் படித்தறிந்தார். அண்ணாவுடன் காரில் பயணம் செய்து கொண்டிருந்த அன்பில் தர்மலிங்கம் மற்றும் இளமுருகு பொற்செல்வியைப் பின்னால் திரும்பிப் பார்த்து அண்ணா அவர்கள். கலைஞருக்கு ஏற்பட்டிருந்த ஆபத்தை நினைத்து வருத்தத்தோடு,சற்று கோபத்துடன் பேசினார்.... “அன்பில்!..... கருணாநிதி யிடம் சொல்! அவன் உயிர், அவனுக்கு மட்டும் சொந்தம் அல்ல; தமிழகத்திலே இருக்கின்ற பல்லாயிரக்கணக்கான உயிர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிற உயிர்! துணிவு என்பது வேறு; அசட்டுத் தைரியம் என்பது வேறு! எத்தனையோ பேர் கழகத்திற்கு வரலாம் போகலாம்; ஆனால், ஒரு கருணாநிதியைப் பெற முடியாது “.... என்று வருத்தத்துடன் கூறினார். இப்படிக் கலைஞர் மேல் அண்ணா கொண்டிருந்த பற்றுப் பாசத்தை எப்படி, எவ்வாறு கூறுவது?

1965 ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் இந்தித் திணிப்பை எதிர்த்து மாணவர்கள் போராட்டம் நடந்து வந்தது. அண்ணா உட்பட கழகத் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். அதற்கு முன்னர் 16-2-1965 அன்று நள்ளிரவு முரசொலி அலுவலகத்தில் கலைஞர் நீட்டோலை என்ற அரசியல் மடல் ஒன்றையும், ஒரு கண்ணில் சுண்ணாம்பு என்ற தலையங்கத்தையும் எழுதிக் கொண்டிருந்தார். நள்ளிரவு வீட்டிற்குக் கிளம்பும் நேரத்தில் திடீரென்று காவல் துறை உதவி ஆணையர் ஒருவருடன்வேறு சில அதிகாரிகள் வந்து, கதவைத் தட்டித் தங்களை விசாரணை செய்ய வேண்டும் என்று கைது செய்து காவல்துறை ஆணையர் அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றனர். கலைஞர் எழுதுவதிலும், பேசுவதிலும் மாணவர்களைத் தூண்டி விட்டார் என்று சென்னையிலிருந்து 600 கீ.மீ. தொலைவிலுள்ள நெல்லை, பாளையங்கோட்டை சிறையில் அடைத்தனர். அவர் மீது இந்திய பாதுகாப்புச் சட்டம் 30 (1)இப்படி வழக்கு பதிவாகியிருந்தது. சில நாட்களுக்கு பிறகு சிறையில் அண்ணா சென்று கலைஞரை சந்தித்த பிறகு பாளையங்கோட்டையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்து கொண்டு அண்ணா பேசினார்.

நான் சிறையில் கருணாநிதியை பார்த்த போது, என்னையோ, என் மனைவியையோ, அல்லது அவரின் மனைவியையோ, உறவினரையோ பற்றி கேட்கவில்லை. மாறாக தருமபுரியில் நடைபெறும் இடைத்தேர்தலை பற்றி கேட்டதுடன், அத்தேர்தலில் கழகம் வெற்றி பெறுவதற்கான கருத்துக்களை தெரிவித்தார். இந்துக்களுக்குக் காசி எப்படிப் புனித பூமியோ, முஸ்லிம்களுக்கு மெக்கா எப்படிப் புனித பூமியோ, கிறிஸ்தவர்களுக்கு ஜெருசலம் எப்படிப் புனித பூமியோ, அது போல என் தம்பி கருணாநிதி தனிமைச் சிறையில் அடைபட்டுக் கிடைக்கும் இடம் தான் இனி எனக்குப் புனித பூமி! அதுதான் யாத்திரை செய்ய வேண்டிய புனித பூமி! இங்கே கருணாநிதியைத் தனியாகச் சிறையில் பக்தவச்சலம் அடைத்து விட்டார் என்று சொன்னார்கள்! அது தவறானது; பாம்புகள் பூரான்கள் நெளியும் கொடிய பாழ்ச் சிறையில் தான் கருணாநிதியைப் பூட்டிச் வைத்திருக்கிறார்கள்!.....” என்று மிக மிக நெஞ்சைப் பிழியும் வார்த்தைகளால் அண்ணா உருக்கமாகப் பேசினார்.

1967 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் மன்னார்குடி தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தை முடித்துக் கொண்டு பட்டுக் கோட்டைக்குச் செல்ல வேண்டிய நிலையில் இருந்தார். மேலும், தேர்தல் பிரச்சாரத்திற்காகத் தமிழகத்தின் பல பகுதிகளுக்குச் செல்ல வேண்டியவராகவும் இருந்த அண்ணா அவர்கள், மேடையில் இருந்த கலைஞரைப் பொதுமக்களுக்குச் சுட்டிக்காட்டி “நான் வரலாற்றின் முற்பகுதியை எழுதி விட்டேன்; பிற்பகுதியை என் தம்பி கருணாநிதி எழுதுவார்!” ... என்று பேசினார். மன்னார்குடி கூட்டத்தில் மேலும் பேசிய அண்ணா ....”எனக்கு அடுத்த பணியைத் தொடர போவது கருணாநிதி தாம்; தமிழகத்தின் புதிய வரலாற்றினைப் படைக்கும் பொறுப்பினைத் தி.மு.க.வும் மேற்கொண்டுள்ளது. அதன் முன் பகுதியினை நான் உங்கள் முன் சித்தரித்துக் காட்டினேன் . புதிய வரலாற்றின் அடுத்த பகுதியை, நான் விட்ட இடத்தில் இருந்து தம்பி கருணாநிதி தொடர்ந்து சித்தரித்துக் காட்டுவார்...” என்று தமக்குப் பின்னால் தன்னுடைய இடத்தை யாராலும் நிரப்ப முடியாது என்பதைக் கலைஞரை அன்றே அண்ணா அடையாளங் காட்டிப் பேசினார் என்பதுதான் வரலாறு!

சென்னை விருகம்பாக்கத்தில் 1966 டிசம்பர் 29,30,31, 1967 ஜனவரி 1 ஆகிய நான்கு நாட்கள் தி.மு.கழகத்தின் பொது மாநாடு நடைபெற்றது. மாநாட்டின் கடைசி நாளான 1967 ஜனவரி 1 அன்று நிகழ்ச்சிகள் அண்ணா தலைமையில் நடைபெற்றன. அந்நிகழ்ச்சியில் பொருளாளராக இருந்த கலைஞர் தேர்தல் நிதியாக தான் வசூலித்த 11 இலட்சத்தை அறிஞர் அண்ணா அவர்களிடம் ஒப்படைத்தார்.. பெற்றுக் கொண்ட அண்ணா தேர்தல் வேட்பாளர்களை அறிவித்து உரையாற்றினார்.

“தம்பி உனக்கு நிதி என்று உன் தந்தையும், தாயாரும் பேரிட்டார்கள்; அதை சும்மாவா வைத்தார்கள். உனக்குத் தாய் இட்ட பெயர் வீணாகி விடவில்லை: உன் தாயார் உனக்குப் பெயரிட்டது நாட்டு மக்கள் உன்னை நிதியாகப் பயன்படுத்திக் கொள்ளட்டுமே என்றுதான்!இன்றைக்கு அவர்கள் உயிரோடு இருந்து இந்தக் கண்கொள்ளாக் காட்சியைப் பார்க்க நேரிட்டால், “உனக்கு நான் இட்ட பெயர் வீணாகி விடவில்லை.” என்று எவ்வளவு மகிழ்ச்சி அடைந்து இருப்பார்கள் . நாட்டு மக்கள் உன்னை நிதியாகப் பயன்படுத்திக் கொள்ளட்டும் “.... என்று மகிழ்ச்சியோடு கூறினார். அடுத்து திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்கள் பட்டியலை வெளியிட்ட போது, சைதாப்பேட்டை வேட்பாளர் என்று வாசித்து, கணப்பொழுது அமைதியாக இருந்து விட்டுப் பெயரை அறிவிக்காமல் திரு. பதினோரு இலட்சம் என்று அவருக்கே உரிய அறிவார்ந்த குறும்புப் பார்வையால் பார்வையாளர்களைப் பார்த்தாரே; அந்தப் பேரறிஞர் அண்ணா! அதன் மூலம் மக்களின் கையொலி, வானைப் பிளந்தது என்பதையும் நினைவு கூரத் தகுந்தது!

கலைஞரைப் பற்றிப் பேரறிஞர் அண்ணா “தம்பி கேள்” எனும் தலைப்பில் எழுதிய கவிதையில், “காது கொடுத்து கேள் நீ என்றான்! கருணாநிதி எனுமரிய கழகக் கம்பி! ஏது மரியாத் தமிழர் தூய வாழ்வை, எனக்குப் பின் சீர்படுத்தும் மறவன் நீதான்! “ என்று அடையாளம் காட்டி இருந்தார்!

பெரியாரிடம் கலைஞர் குறித்து கேட்கப்பட்ட கேள்விகளில் ஒன்று “....அண்ணாவுக்கு அடுத்தபடியாக உள்ள தங்களின் கலைஞர் பற்றிச் சிறிதேனும் கூறுங்கள் ஐயா!.....” என்று கேட்கப்பட்டது. “கருணாநிதி அவர்கள் இராஜதந்திரமிக்கவர். இந்த நாடு சிக்கல் நிறைந்த நாடு. ஒழுக்கம், நாணயம், நேர்மை ஆகியவற்றைப் பற்றிக் கவலைப்படாத மக்கள் உள்ள நாடு. இந்த நாட்டில் மிகச் சிக்கலான பிரச்சனைகள் எல்லாம் மிக்க அறிவுத்திறன் காரணமாகக் தீர்த்து வருகிறார்! “ இவ்வாறு அவர் பட்டியலிட்டு இருந்தார். இவ்வாறு பெரியாரும், அண்ணாவும் கலைஞரைப் பற்றிச் சான்றாவணமாக வரலாற்றில் பதிவு செய்துள்ளனர்..

பொற்கால ஆட்சியை நிகழ்த்தி வரும் தளபதி மு.க. ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் திராவிட மாடல் அரசு, கலைஞரின் நூற்றாண்டை ஒட்டி சென்னை கிண்டியில் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை, * மதுரையில் உலகத் தரத்திலான கலைஞர் நூற்றாண்டு நூலகம் * சென்னை கிளாம்பாக்கத்தில் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் * மதுரையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பேரில் உலகத் தரத்திலான ஏறு தழுவுதல் அரங்கம் * திருச்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் பேருந்து நிலையம் * இல்லத்தரசிகளுக்கு மாதம் ஆயிரம் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் * ஏழைகள் ஏற்றம் பெறத்தக்க கலைஞர் கனவு இல்லத் திட்டம் * சாதி பேதமற்ற வகையில் கைவினைக் கலைஞர்களை ஊக்குவிக்க கலைஞர் கைவினைத் திட்டம் * கும்பகோணத்தில் அமைய உள்ள கலைஞர் பல்கலைக்கழகம் இப்படி கலைஞரின் புகழ் திக்கெட்டும் புகழ்க் கொடி நாட்டி ஓங்கி உயர்ந்து நிற்கும் தளபதி மு.க.ஸ்டாலின்;மக்களுக்கான பல்வேறு சட்ட திட்டங்களில் இடம்பெறச் செய்து, வரலாறு படைத்துப் பேச வைத்துள்ளார். அது மட்டுமல்லாமல், அண்ணா கல்லறை அருகே, கடற்கரையில் ஓய்வு கொள்ளும் முத்தமிழறிஞர் கலைஞருக்கு, உலகம் போற்ற நினைவிடமும், நவீன தொழில் நுட்பக் கலைஞர் உலகமும் அமைத்துச் சிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆம்; கலைஞர் சென்று விடவில்லை; அவர் நம்